செ.வெ.எண்:-39/2020 நாள்:30.03.2020

**திண்டுக்கல் மாவட்டம்**

**கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட விரும்பும் தன்னார்வலர்கள் http://dindigul.nic.in என்ற இணைய தளத்தில் தங்களது விபரங்களை பதிவு செய்யலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்கு 144 தடை உத்தரவின் காரணமாக அத்தியாவசிய பொருட்கள் எளிதில் கிடைக்கும் வகையிலும், காய் கறி கடைகள் மற்றும் மளிகை கடைகள் பொருட்கள் வாங்கும் போது நோய் தொற்று பரவாமல் தடுத்திடும் பொருட்டு சமூக இடைவெளி ஏற்படுத்தப்பட்டு பொருட்கள் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், நமது திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள விருப்பமுள்ள தன்னார்வலர்கள் **http://dindigul.nic.in** என்ற இணைய தளத்தில் தங்களது விபரங்களை பதிவு செய்து கொள்ளலாம். பணி மற்றும் தேவையை அளவை பொறுத்து தன்னார்வலர்கள் மாவட்ட நிர்வாகம் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுத்தப்படவுள்ளனர். எனவே, இப்பணியினை மேற்கொள்ள விரும்பும் தன்னார்வலர்கள் தங்களது விபரங்களை பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**